**செய்தி வெளியீடு எண்: 412** **நாள்: 26.06.2018**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு திருக்கோயில் சங்கங்களின் கூட்டமைப்பு கடந்த 24.06.2018 அன்று தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 27.06.2018 அன்று உள்ளிருப்பு போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்திருந்தனர். 25.06.2018 அன்று மாலை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், ஆணையர் மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் தமிழ்நாடு திருக்கோயில் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இப்பேச்சு வார்த்தையின்போது கூட்டமைப்பு அளித்த அனைத்து கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும் என்றும், 7வது ஊதிய நிர்ணயக்குழுவினை விரைவில் அமைத்து, சில கோரிக்கைகளை அக்குழு முன் வைத்து, அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் விரைவில் முடிவெடுக்கப்படும் என்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. சில கோரிக்கைகளை பரிசீலிப்பதற்காக விதிமுறைகள் ஏற்படுத்த வேண்டியுள்ளதால், கூடிய விரைவில் அவ்விதிமுறைகள் ஏற்படுத்தி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. பணிக்கொடை சம்பந்தப்பட்ட கோரிக்கையினை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்துதல், ஊக்க ஊதிய உயர்வு, ரொக்கப் பரிசு, குடும்ப நலநிதி போன்ற பணிச் சலுகைகளை ஏற்பது குறித்து விவரங்கள் சேகரித்து, சாத்தியக்கூறுகளுக்குட்பட்டு ஏற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளில் திருப்தி அடைந்த தமிழ்நாடு திருக்கோயில் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நன்றி தெரிவித்து, வரும் 27.06.2018 அன்று தங்களால் நடத்தவிருப்பதாக தெரிவித்த உள்ளிருப்பு போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**